

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிலிருந்து எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண்மணி திருமதி முத்தமிழ்ச்செல்வி, உலகின் ஏழு கண்டங்களிலுள்ள உயரமான மலை சிகரங்களை அடைந்து சாதனை படைத்தமைக்காக சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.




சிவகங்கை மாவட்டம், குன்றக்குடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைந்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் மணிமண்டபத்தில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் 101–வது பிறந்த நாள் அரசு விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி நேற்று (11.07.2025) குன்றக்குடி ஆதினம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார் ஆகியோர் முன்னிலையில் அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## இராமநாதபுரம் பெருங்குடி – வடக்கன்குளம் கிராமத்தில்

# கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 12-

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருங்குடி பகுதி-1 கிராமம், வடக்கன்குளம் குழந்தைகள் இல்லத்திலுள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி-முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மாறாந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் - திருமதி. ராமலெட்சுமி தம்பதியரின் மகன் செல்வன். சேர்மதுரை (வயது 12) என்பவர் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருங்குடி பகுதி-1 கிராமம், வடக்கன் குளம் CMS குழந்தைகள் இல்லத்தில் தங்கி அருகிலுள்ள கன் கார்டியா மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு பயின்றுவந்த நிலையில் கடந்த 8.7.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் CMS குழந்தைகள் இல்ல வளாகத்தில் பயன்பாட்டில் உள்ள கிணற்றில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடியவர் தமிழ் மண் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த வீரர் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளில் அவர்களது திருவுருவ சிலைக்கு சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் பெ.கீதா ஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோவில்பட்டி நகர்மன்றத் தலைவர் கருணாநிதி ஒன்றிய செயலாளர்கள் முருகேசன்,ராதா கிருஷ்ணன், கருப்பசாமி, அய்யாத்துறை, சுப்பிரமணியன் பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் 268 வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் ஆ. வெங்கடேசன், ஜிபி ராஜா, நேரு பாண்டியன், சசிகுமார், பூமிநாதன், வீரராகவன், கௌரி சங்கர், திருப்பாலை ராமமூர்த்தி, எஸ் வி சுதன், காவேரி , தவமணி, மீரா ஜான் ஆனையூர் பாபு, முருகேசன் , பாலகிருஷ்ணன், தம்பி செந்தில், லட்சுமணன் மற்றும் தள்ளான கழக நிர்வாகிகள் கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், நபார்டு வங்கி தலைவர் டாக்டர் ஷாஜி சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நபார்டு வங்கி தலைமை பொது மேலாளர் ஆர்.ஆனந்த், பொது மேலாளர் எஸ்.எஸ்.வசீஹரன், உதவிப் பொது மேலாளர் எம்.சுந்தரராமன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், முதல்வரின் முகவரி துறையின் கீழ், மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டம் 15.7.2025 அன்று சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்கப்படவுள்ளதையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க.
# இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### அரியலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 13.07.2025 | ஜெயங்கொண்டம் மத்திய ஒன்றியம் | தண்டலை | கவிஞர் இளஞ்செழியன்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 2 | | திருமானூர் மத்திய ஒன்றியம் | சேனாபதி | பழ.புனிதம்<br>ரா.சிந்துநதி |
| 3 | | அரியலூர் தெற்கு ஒன்றியம் | அருங்கால் ஊராட்சி | எசனை சி.ஆறுமுகம்<br>ப.வெங்கடேஷ் |
| 4 | | தா.பழூர் மத்திய ஒன்றியம் | சுத்தமல்லி ஊராட்சி | மு.விஜயரத்தினம்<br>ஐ.பாலகணபதி |
| 5 | | ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம் | பெரிய கிருஷ்ணாபுரம் (ரெட்டிதத்தூர்) | நாமக்கல் ராஜகோபால்<br>சி.மில்லர் மண்டேலா |
| 6 | | செந்துறை வடக்கு ஒன்றியம் | ஆர்.எஸ்.மாத்தூர் | கவிஞர் வீரமுரசு<br>ரா.கனிமொழி |
| 7 | 14.07.2025 | தா.பழூர் கிழக்கு ஒன்றியம் | நாயகனைபிரியாள் | எசனை சி.ஆறுமுகம்<br>அ.அருண்குமார் |
| 8 | | ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் | குளத்தூர் | கவிஞர் வீரமுரசு<br>காருண்யா நடராஜன் |
| 9 | | ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம் | ஜெயங்கொண்டம் குறுக்கு சாலை | மு.விஜயரத்தினம்<br>மு.ராமமூர்த்தி |
| 10 | | திருமானூர் மேற்கு ஒன்றியம் | சன்னாவூர் | பழ.புனிதம்<br>துரை தினகரன் |
| 11 | | அரியலூர் வடக்கு ஒன்றியம் | பொட்டவெளி ஊராட்சி, வெள்ளூர் கிராமம். | கவிஞர் இளஞ்செழியன்<br>வா.ராஜேஸ்வரி |
| 12 | | செந்துறை மேற்கு ஒன்றியம் | சன்னாசிநல்லூர் | பவித்ரம் கண்ணன்<br>அ.விஜயலெட்சுமி |
| 13 | 15.07.2025 | தா.பழூர் மேற்கு ஒன்றியம் | திருபுரந்தான் | கவிஞர் வீரமுரசு<br>அ.சுஹாசினி |
| 14 | | ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம் | அழகாபுரம் | கவிஞர் இளஞ்செழியன்<br>ம.சையது முஷரப் |
| 15 | | ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம் | இளமங்கலம் (கச்சிபெருமாள்) | பழ.புனிதம்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 16 | 16.07.2025 | திருமானூர் கிழக்கு ஒன்றியம் | கோமான் | கவிஞர் வீரமுரசு<br>அ.தீன்ஷா நூஃப் |
| 17 | | செந்துறை தெற்கு ஒன்றியம் | சிறுகடம்பூர் | கவிஞர் இளஞ்செழியன்<br>அ.செல்வக்குமார் |
| 18 | | அரியலூர் நகரம் | வார்டு–13, தேரடி வீதி. | பழ.புனிதம்<br>சி.ஷாலினி |
| 19 | | உடையார்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்<br>அ.தீன்ஷா நூஃப் |
| 20 | 17.07.2025 | ஜெயங்கொண்டம் நகரம் | தேவாங்கர் நடுத்தெரு | கவிஞர் வீரமுரசு<br>ஜெ.ராஜேஸ்வரி |
| 21 | | வரதராஜன்பேட்டை பேரூர் | ஆரோக்கியபுரம் | கவிஞர் இளஞ்செழியன்<br>காருண்யா நடராஜன் |
| 22 | | அரியலூர் மத்திய ஒன்றியம் | வி.கைக்காட்டி | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்<br>அ.அருண்குமார் |

அரியலூர்

நாள் : 10.07.2025

கலைஞர் 100 1924 - 2023

